சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் சென்னை சவுகார்பேட்டையில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி கன்வென்ஷன் ஹாலில் நடந்தது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம். பி. ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். உடன் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, கிழக்குப் பகுதி செயலாளர் ராஜசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், மாவட்டத் துணைச் செயலாளர் ஜி.எம்.தேவன், மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமலு, தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலையில் உள்ள அன்னை வேளாங்கன்னி கலைகல்லூரி கலையரங்கத்தில் பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையிலும் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் 10வது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், வி.பி.ஞானகிராமன் முன்னிலையிலும் வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா வரவேற்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார். தமிழச்சிதங்கபாண்டியன் எம்.பி., தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், மாவட்ட துணைசெயலாளர் வாசுகிபாண்டியன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், சைதைசாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன் உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள், கழகமுன்னோடிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவில்

டி.ஆர்.பாலு - திருச்சி சிவா இடம் பெற்றுள்ளனர்!

செபி செயல்பாடுகள் குறித்து குழு விசாரணை!

புதுடெல்லி, செப். 7 - செபி செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்ற பொது கணக்குக்குழு முடிவு செய்துள்ளது.

இதனிடையே, செபி தலைவர் மாதவியை நேரில் அழைத்து விசாரிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற பொது கணக்குக் குழுவின் தலைவராக காங்கிரஸ் உறுப்பினர் கே.சி. வேணுகோபால் அண்மையில் நியமிக்கப்பட்டார்.

அதன் இரண்டாவது கூட்டம் விரைவில் நடைபெற உள்ளது.

அந்தக் கூட்டத்தில் செபி மீதான புகார் குறித்தும், செபியின் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்க முடிவு செய்யப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதானி செபி ஊழல் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழு செபி விவகாரங்கள் தொடர்பாக விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது.

22 உறுப்பினர்கள் கொண்ட பொதுக் கணக்கு குழுவில் 15 மக்களவை உறுப்பினர்கள், 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் சௌகதா ராய், சுகேந்து சேகர் ராய், சமாஜ்வாதி கட்சியின் தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

வக்பு வாரிய மசோதா ஆய்வில் எதிர்க்கட்சிகள் கருத்துக் கூற வாய்ப்பு மறுப்பு!

விவரத்தை ஒன்றிய அரசு மறைத்துள்ளது – ஆ.ராசா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 7 - நாடாளுமன்றக் கூட்டுக்குழுவில் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்காமல் வக்பு வாரிய மசோதா அவசர கதியில் ஆய்வு செய்யப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தாக்கல் செய்த வக்பு வாரிய மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு எழுந்ததை தொடர்ந்து இரு அவைகளின் கூட்டுக்குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்த குழுவின் மூன்றாவது கூட்டம் அதன் தலைவர் ஜெகதாம்பிகா பால் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பேசிய திமுக மக்களவை கொறடா ஆ.ராசா, வக்பு சட்டம் ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1913 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளதாக குறிப்பிட்டார். இந்த விவரத்தை அரசு மறைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். மேலும், இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க போதிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மசூதிகள் மீதான உரிமம் 17 ஆம் நூற்றாண்டு முதல் உள்ளதாகவும், அரசு முன்வைக்கும் ஆவணங்களை படித்து அதன் மீது கருத்துக் கூற தங்களுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் புகார் தெரிவித்தன.

இந்த போக்கு தொடர்ந்தால் சபாநாயகரை சந்தித்து புகார் தெரிவிக்கப்படும் என்றும் கூறியுள்ளன.

117 ஆண்டுகளுக்குப் பின் - திருநெல்வேலி மாவட்டம்

மானூர் அம்பலவாணசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, செப்.7- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருநெல்வேலி மாவட்டம். மானூரில் 117 ஆண்டுகளுக்கு பின். 08.09.2024 அன்று நடைபெறும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களில் ஒன்றான அம்பலவாணசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெரு விழாவில் பங்கேற்று சிறப்பிக்கின்றார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், வருவாய் இனங்களை பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை பாதுகாத்திடும் வகையில் சிறப்பு கவனம் செலுத்தி பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இதுவரை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 34 திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன.

2021 - 2022 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையில், “ சைவத்திருத்தலங்கள் திருப்பணியின் கீழ், ரூ. 69 இலட்சம் அரசு நிதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களில் ஒன்றான திருநெல்வேலி மாவட்டம். மானூர், அம்பலவாணசுவாமி திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திருக்கோயில் தொன்மை மாறாமல் புனரமைப்பட்டு வருகின்ற 08.09.2024 ஞாயிற்றுக்கிழமையன்று குடமுழுக்கு சிறப்பாக நடைபெற உள்ளது.

8 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கருதப்படும் இத்திருக்கோயிலில் மாறஞ்சடையன் ஆட்சிக்காலத்தில் இருந்த உள்ளாட்சி நிருவாக நடைமுறை குறித்த கல்வெட்டுகள் அமையப்பெற்றுள்ளன.

உள்ளாட்சி நிருவாகம் குறித்த உத்திரமேரூர் கல்வெட்டுகளுக்கு, காலத்தால் முந்தைய கல்வெட்டுகள் இவை என்பது குறிப்பிட த்தக்கது.

117 ஆண்டுகளுக்கு பின் நடைபெறும் மானூர், அம்பலவாணசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி,கே.சேகர்பாபு அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சமய பெரியோர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். இப்பெருவிழாவில் இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று ஈசன் அருள் பெற வேண்டுகிறோம்.

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி பொது உறுப்பினர் கூட்டம் சென்னை 99 விவேகானந்தா நகர் மீனா மஹாலில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனை வழங்கினார். அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை தாங்கினார். மாநில தொழிலாளர் அணி செயலாளர் அம்பத்தூர் தேர்தல் பொறுப்பாளர் செல்வராஜ், அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி, எம்.சி. அம்பத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் நீலகண்டன் எம்.பி., மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் சாந்தகுமாரி எம்.சி., உஷா நாகராஜ் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜே.பாலமுருகன், வட்ட செயலாளர்கள் சி.லோகநாதன், மு.விஜயகுமார், தாவா.லால், மு சண்முகம், ஆ சுந்தர்ராஜ், அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் மற்றும் அணிகள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,பாக நிலை முகவர்கள், கழக செயல்வீரர்கள், கழகத்தின் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 83 அ வட்ட செயலாளர் சு. மோகன் குமார் நன்றி உரையாற்றினார்.

தமிழ்நாடு உட்பட 8 மாநிலங்களில் பணிபுரியும்

ஆய்வக நுட்புநர்களுக்கு பயிற்சிப் பாசறை நிறைவு விழா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பயிற்சி நிறைவு சான்றிதழ்கள் வழங்கி விழாப் பேருரை!

சென்னை, செப். 7 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் அவர்கள் நேற்று (06.09.2024), சென்னை, தேனாம்பேட்டை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககத்தில் உள்ள மாநில பொது சுகாதார ஆய்வகத்தில், தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழ் நாடு உட்பட 8 மாநிலங்களில் பணிபுரியும் ஆய்வக நுட்புநர்களுக்கு 4 நாட்கள் பயிற்சி பாசறை நிறைவு விழாவில், ஆய்வகத்தை பார்வையிட்டு, ஆய்வக நுட்புனர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி, ஆய்வக கையேட்டினை வெளியிட்டு, விழா பேருரையாற்றினார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நியூட்ரிசன் இன்டர்நேசனர் (Nutrition International) நடத்திய இந்திய அயோடின் கணக்கெடுப்பு 201819 ஆம் ஆண்டு மக்கள் தொகையில் 76% மட்டுமே போதுமான அளவு அயோடின் கலந்த உப்புகளை மக்கள் உட்கொள்வதாக தெரியவருகிறது. அயோடின் என்பது அயோடின் என்பது அத்தியாவசியமான ஒரு நுண்ணூட்டச்சத்து ஆகும். ஒரு நாளைக்கு 100 முதல் 150 மைக்ரோ கிராம் வரையிலான அயோடின் மனிதனின் உடல் வளர்ச்சிக்கும் மற்றும் மன வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது. அயோடின் தைராய்டு ஹர்மோன் உருவாக்குதலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கர்ப்ப காலத்தில் அயோடின் குறைபாடு பெண்களின் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. கருச்சிதைவு அபாயத்தையும் ஏற்படுத்துகிறது. ஒரு குழந்தையின் முதல் 1000 நாட்களில் மூளை வளர்ச்சியின் பெரும்பகுதி அயோடினை சார்ந்தே நடைபெறுகிறது. பதப்படுத்தப்பட்ட உணவை உற்பத்தி செய்யப் பயன்படும் அனைத்து உப்பையும் அயோடினுடன் வலுப்படுத்துவதை இந்திய அரசு கட்டாயப்படுத்தியுள்ளது. தேசிய அயோடின் குறைபாடு கோளாறுகள் கட்டுப்பாட்டு திட்டம் (National Iodine Deficiency Disorders Control Program (NIDDCP) இந்திய அரசாங்கத்தால் நாட்டில் Intellectual and developmental disabilities (IDD) அளவை மதிப்பிடுவதற்கும், போதுமான அளவு அயோடின் கலந்த உப்பின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு ஆகியவற்றை உறுதி செய்வதற்கும், விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதில் தமிழ்நாடு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக இருக்கின்ற காரணத்தினால், தமிழகத்தில் தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு திட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்ககத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு என பிரத்தியேகமாக மாநில அயோடின் ஆய்வகம், டிஎம்எஸ் வளாகத்தில் இயங்கி வரும் மாநில பொது சுகாதார ஆய்வகத்தில் இயங்கி வருகிறது.

இந்த ஆய்வகத்தில் பிற மாநிலங்களில் இயங்கி வரும் மாநில அயோடின் ஆய்வகங்களில் பணிபுரியும் ஆய்வக நுட்புனர்களுக்கு 4 நாட்கள் மாநில பொது சுகாதார ஆய்வகத்தில் பயிற்சி பட்டறை (Hands on Training) வழங்கப்பட்டது. இந்த பயிற்சி பட்டறையின் நிறைவு நாளான இன்று (10.09.2024) ஆந்திர பிரதேசம், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், உத்திர பிரதேசம், குஜராத் மற்றும் தமிழ்நாடு உட்பட 8 மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு பயிற்சி பெற வந்துள்ள 22 ஆய்வு நுட்புனர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மேலும், இந்தியா முழுமைக்கும் இந்த பயிற்சிகள் கொண்டு சேர்க்கும் வகையில், பொது சுகாதார துறையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இப்பயிற்சிக்குரிய ஆய்வக இதழ் (Training Manual) வெளியிடப்பட்டது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.விஜயலட்சுமி, மரு.சம்பத், இணை இயக்குநர் மரு. சண்முகசுந்தரம், துணை இயக்குநர் மரு.ராஜு, ஓய்வு பெற்ற எய்ம்ஸ் பேராசிரியர் பத்மஸ்ரீ மரு.காட்போலே (Dr.Godbole), புதுடெல்லி, நியூட்ரிஷன் இன்டர்நேஷனல் தன்னார்வ அமைப்பின் திட்ட அலுவலர் ரஞ்சன் ஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி. தலைமையில்

சேப்பாக்கம் பகுதிக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

தயாநிதி மாறன் எம்.பி - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு எம்.சி. சிறப்புரை!

சென்னை, செப். 7- கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழகஇளைஞர்அணிச்செயலாளர், இளைஞர்நலன்மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (08.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, ஒய்.எம்.சி.ஏ. மைதானம், இராயப்பேட்டையில் நடைபெறுகிறது.

சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர், 9 வது மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்தயாநிதிமாறன், மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்நே.சிற்றரசுஎம். சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே தலைமை பொதுக்குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,தலைவர்கள்,

துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பாக் முகவர்கள் (BLA2) மற்றும் கழக செயல் வீரர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

115 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி. வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.